Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C.55/2023** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW1** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

Name : செல்லம்மாள்

Husband Name : பொக்கார்

Village : அண்ணாமலைநகர்

Taluk : ஆர்.எஸ்.மங்களம்

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.07.2025.

<u>(3ம் எதிரி தவிர்த்து இதர எதிரிகள் ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை தொடர்ச்சி:–**

12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு எனது கணவர் இரவு 10 மணிக்கு இந்திரா என்பவரது வீட்டிற்கு மேற்படி இந்திரா காதுகுத்திற்காக வாங்கி இருந்த ரூ.15 ஆயிரத்தை வாங்குவதற்காக சென்றார். எங்க ஊர் கணேசன் கோவிலுக்கு முன்பாக எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என் கணவரை அடித்து பஞ்சாயத்து வைத்தார்கள், ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்தார்கள். என் கணவர்தான் என்னிடம் ஊர்க்காரர்கள் அடித்ததாக சொன்னார். என் கணவரை அடித்ததால் அவர் வலி தாங்க முடியாமல்

மருந்து குடித்து இறந்துவிட்டார். இது சம்மந்தமாக என் மகன் ஆர்.எஸ். மங்களம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என் கணவர் இந்திரா என்பவரிடம் பணம் கொடுத்த விவரமும், பணம் வாங்க சென்ற விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. என் கணவர் எத்தனை ஆண்டுகளுக்கு முன் கொடுத்தார் என்றால் தெரியாது. என் கணவரை ஊர்க்காரர்கள் அடித்தபோது நான் அந்த இடத்தில் இல்லை என்றால் என் கணவரை அடித்ததில் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. என் மகன் புகார் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு தெரியாது.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.